செய்தி வெளியீடு எண்:297 நாள் : 16–06–2016

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், சென்னை மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் சுதா சேஷையன் அவர்களின் தாயார் டாக்டர் சாரதா அவர்களின் மறைவையடுத்து அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:

“தங்களின் அன்புத் தாயார் டாக்டர் சாரதா அவர்கள் 12.6.2016 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

டாக்டர் சாரதா அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.’’

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9**

**நாள்: 16.6.2016**